இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 06.10.2023
O.S.79/2019
வா.சா.1 ராமசந்திரன்
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பட்டிகை சொத்து ஆரம்பத்தில் ஆபத்துகாத்த பிள்ளை என்பவருக்கு சொந்தமானவர் என்றால் சரிதான். 07.03.1951 அன்று ஆபத்துகாத்தபிள்ளை மாடிபிள்ளை என்பவருக்கு பட்டிகை சொத்தை ஒத்திக்கு கொடுத்தார் என்றால் சரிதான். ஒத்தி என பத்திரத்தில் எழுதியிருந்தாலும் அடமானம் என கருதி ஆபத்துகாத்தபிள்ளை சொத்தை கைவசம் வைத்திருந்தார் என்றால் சரிதான்.

30.09.1961 ல் ஆபத்துகாத்தபிள்ளை குடும்பத்தில் ஒரு பாகபத்திரம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. ஆபத்துகாத்தபிள்ளை மகன் சிதம்பரதாணுபிள்ளை 12.12.1952 ல் செண்பகம்மாள் என்பவருக்கு ஒரு கூடுதல் ஒத்தி எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அவர்களும் அதனை அடமானமாக கருதி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 30.09.1961 ல் மாடிபிள்ளை பெயருக்கு செண்பகம்மாள் ஒத்திக்கு விலை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

செண்பகம்மாள் பெயருக்கான ஒத்தி பத்திரத்திலும் மாடிபிள்ளை பெயருக்கு எழுதி கொடுத்த 30.09.1961 ஒத்திக்கு விலை பத்திரத்திலும் முன் ஒத்தி பத்திரங்களை தங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். செண்பகம்மாள் பெயருக்கு சிதம்பரதாணுபிள்ளை எழுதி கொடுத்த கூடுதல் ஒத்தி ஆவணத்தில் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் என்னிடம் இல்லாததால் நான் தாக்கல் செய்யவில்லை.

18.04.1968 ல் மாடிபிள்ளை என் தகப்பனார் பெயருக்கு

மறுபடியும் ஒத்திக்கு விலை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் முன் ஆவணங்கள் அசல் ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது சரிதான். வா.சா.ஆ.1, 13, 2 மற்றும் 3 ஆகிய ஆவணங்கள் ஒத்தியாக என இருந்தாலும் அடமானமாக இருந்தது வந்தது என்றால் சரிதான். ஆனால் 6 ஆண்டுகளுக்குள் அடமானத்தை திருப்ப வேண்டும்.

அந்த ஒத்தியை 36 ஆண்டுகளாக திருப்பாததால் எனது உடமஸ்தம் பெயரில் சொத்து மீது உரிமை பிரகடனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சொத்து மாறுதல் சட்ட பிரிவு 58,60 கால வரை சட்டம் பிரிவு 61 ன் படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கதக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.12 பாக பிரிவினை பத்திரத்தில் ஆபத்துகாத்தபிள்ளை அவருடைய பிள்ளைகள் மற்றும் பேர பிள்ளைகள் சேர்ந்து பாகம் செய்து உள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.12 யை நான் எதற்காக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞருக்குதான் தெரியும். அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்ய வேண்டும் என்பதால் தாக்கல் செய்துள்ளேன்.

ஒத்திக்கு விலை பத்திரம் வா.சா.ஆ.3 ன் படி என் அப்பா கைவசம் சொத்து ஒருபோதும் வந்தது கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல ஆபத்துகாத்தபிள்ளை 1976 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே இறந்தார். ஆபத்துகாத்தபிள்ளை 1976 ற்கு முன்பு இறந்தார் என சொல்வதற்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ய முடியுமா

என்றால் எனக்கு அவசியம் இல்லை. வா.சா.ஆ.1 எழுதி கொடுத்த ஆபத்துகாத்தபிள்ளை வாரிசுகள் 2 ஆம் பிரதிவாதி பெயருக்கு வா.சா.ஆ.4 விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5 ஆவணத்தை 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் முத்துசாமி 22.11.2017 அன்று அவர் பெயரில் கரம் கட்டிய ரசீது இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துசாமி பிள்ளையிடம் விலை வாங்கிய மீனா கரம் கட்டியது குறித்து நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆட்சேபனை எதுவும் செய்தேனா என்றால் நான் கிராம நிர்வாக அலுவலகம் செல்லவில்லை.

நான் வட்டாட்சியருக்கோ மாவட்ட ஆட்சியருக்கோ முத்துசாமி பெயரிலோ, மீனா பெயரிலோ கரம் செலுத்தப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் எனக்கு 2019 ஆம் ஆண்டு வரை தெரியாது. 2019 ஆம் ஆண்டு இயற்கை சீற்றத்தால் நான் அடுத்த தெருவுக்கு சென்று விட்டேன். அதன்பின் எனக்கு தெரிய வந்ததால் நான் வழக்கு தாக்கல் செய்தேன். வட்டாட்சியரிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் நான் மனு கொடுக்கவில்லை.

வா.சா.ஆ.5 அனுசரித்து 22.11.2017 லிருந்து 2 ஆம் பிரதிவாதி கைவசம்தான் சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் புல எண் 442/3 என்றால் சரிதான். வா.சா.ஆ.8 புல எண் 442/2 மற்றும் 442/4 க்கு தாக்கல் செய்தது போல் புல எண் 442/3 ற்கும் பட்டா என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யலாம்.

இந்த வழக்கு புல எண் 442/2 மற்றும் 442/4 ற்கு ஆன வழக்கு

இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்றால் அது என் அப்பா தனியாக வாங்கிய சொத்து. 2019 ல் வீடு கொஞ்சம் கொஞ்சமாக இடிந்து சேதம் அடைந்து விட்டது. வா.சா.ஆ.14 இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக 28.12.2020 15.11.2021 அன்று வாங்கியுள்ளேன் என்றால் பழைய ரசீதுகள் என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.16, 17 மற்றும் 18 என் கைவசம் அனுபவத்தை நிரூபிக்காது என்றால் சரியல்ல.

22.11.2017 முதல் 2 ஆம் பிரதிவாதி கைவசத்தில் பட்டிகை சொத்து இருப்பதால் பட்டிகை சொத்து என் கைவசம் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பட்டிகை சொத்து 2 ஆம் பிரதிவாதி கைவசம் இருப்பதால் என் அனுபவத்தை தொந்தரவு செய்ய வந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒத்தி வாங்கியதன் அடிப்படையில் எங்கள் கைவசம் ஒரு போதும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல.

புல எண் 442/3 ற்கு பட்டா 1, 2 பிரதிவாதிகள் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். மீனா ஆட்கள் இடத்தில் போர் போட வந்தார்கள். 2019 ஆம் ஆண்டு வந்தார்கள். அவர்கள் மீனாவின் பெயரில் வாங்கியதாக சொன்னார்கள். நான் என் சொத்து என்று சொன்னவுடன் போரை மூடி வைத்து போய் விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகைபடம்தான் அந்த சொத்து போர் போட்ட மூடி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது. பி.சா.ஆ.1 ஆகும். அந்த போர் மூடி வைக்கவில்லை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 15.04.2019 அன்று பட்டிகை சொத்தில் 100 அடி ஆழத்தில் ரூ.20,000/- செலவு செய்து போர் போட்டுள்ளார் என்றால் போர் போட்டால் செலவு ஆகதான் செய்யும்.

அந்த போரை ஆட்சேபித்து எந்த பரிகாரமும் கேட்வில்லை என்றால் போர் போட்ட பிறகுதான் தடுத்து நிறுத்தினேன். வா.சா.ஆ.4 மற்றும் 5 செல்லத்தக்க ஆவணம் என்றாலும் அதனை ஆட்சேபிக்க எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த ஆவணங்கள் நான் கூறுவது போல் செல்லத்தகாத ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

1 ஆம் பிரதிவாதி சட்ட பூர்வ உரிமையாளர் நிலையில் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பதிலுரையில் 1 ஆம் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதை ஆட்சேபித்து நான் எந்த பரிகாரமும் கேட்காததால் எனது வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் உண்மை விவரங்களை மறைத்து உள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கிற்கு மூல காரணம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றாலும் நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.